ந.க.எண். 455/நத4/2020
நாள் 27.01.2020

இயக்குநர் அலுவலகம்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
நந்தனம்,
சென்னை–35.

சுற்றறிக்கை எண் 03/2020

பொருள் :	தணிக்கை – சொத்து வரி – பொது சீராய்வு மேற்கொண்டது– அரசாணையின்படி சொத்துவரி சீராய்வு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டது – தணிக்கையில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அறிவுரைகள் வழங்குவது – குறித்து
பார்வை :	1. அரசாணை (நிலை) எண் 150, ந.நி (ம) கு.வ. (MA IV) துறை நாள் 19.11.2019 2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 கடிதம் ந.க.எண் 40032/2012/R1 நாள் 03.12.2019

பார்வை 1 இல் காணும் அரசாணையின் படி உள்ளாட்சி அமைப்புகளில் 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி பொது சீராய்வினை நிறுத்தி வைக்கவும், சொத்து வரி விதிப்பு தொடர்பாக 01.04.2018 க்கு முந்தைய நிலையே தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை 2 இல் காணும் கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் (மாநகராட்சிகள், நகராட்சிகள்) 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுத் தணிக்கை முடிக்கப்பட்ட நிலையில், 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி பொது சீராய்வினை அரசால் நிறுத்தி வைக்கப்பட்டதால் 2017–18 மற்றும் 2018–19 ஆண்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாறுதல்கள் மற்றும் தணிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து தங்களது சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வினை அரசால் நிறுத்தி வைக்கப்பட்டதால், 2017–18 மற்றும் 2018–19 ஆண்டுக் கணக்குகளில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் மற்றும் தணிக்கையில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி பொது சீராய்வினை அரசால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டதால், 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுக் கணக்குகளின் அடிப்படையில் தணிக்கை முடிக்கப்பட்ட நிலையில், மேற்குறிப்பிட்ட ஆண்டுக்களுக்கான ஆண்டுக் கணக்குகளில் சொத்து வரி கேட்பினை மாற்றம் செய்து தருமாறு நிர்வாகத்தை வலியுறுத்த தேவையில்லை.
2. 01.04.2018 க்கு முந்தைய நிலையில் சொத்து வரி விதிப்பு கேட்பினை மாற்றி அமைத்து 2019–2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகளை நிர்வாகத்தால் அளிக்கும் போது தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகளில் 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி பொது சீராய்வு தொடர்பாக எழுதப்பட்ட தணிக்கை தடைகளை நீக்கம் செய்யப்பட வேண்டும்.
4. 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகளில் சொத்துவரி பொது சீராய்வு செய்ததால் வசூல் செய்யப்படாமல் உள்ள நிலுவைத் தொகைகள், நிலுவை இனத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும்.
5. சொத்து வரி பொது சீராய்வுக்கு பின்னர் புதிய சொத்து வரியுடன் சேர்த்து 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட நூலக வரி, பொது நூலக துறைக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருப்பின் 2019–2020 ஆம் ஆண்டில் நேர் செய்திட வேண்டுமென குறிப்பிட்டு தணிக்கை தடை எழுதப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புகை அளிக்கப்பட வேண்டும்.

(ஒம்)/– பொ. வேல்சாமி
இயக்குநர்

பெறுநர்
சார்நிலை அலுவலர்கள் வகை II இன்படி

நகல் :-
நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகர் நிர்வாக வளாகம்,
சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை–28.

//உண்மை நகல்//

29/11/20

ஆய்வாளர் – தலைமையிடம்